தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-22772060
9443699066

admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




Vol: 03 | Issue: 253 | 4 Pages | 21.07.2026 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 03 | இதழ்: 253 | 4 பக்கங்கள் | 21.07.2026 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்**
**வாரி வளங்குன்றிக் கால்**

**விளக்கம்:**
மழை என்னும் வருவாய் வளம் குன்றிவிட்டால், (உணவுப் பொருள்களை உண்டாக்கும்) உழவரும் ஏர்கொண்டு உழ மாட்டார்.

## மேற்கு வங்காளத்தில் உலகின் மிகப்பெரிய தயிர் உற்பத்தி ஆலை



கொல்கத்தா, ஜூலை 21

மேற்கு வங்காள மாநிலம் ஹவுரா மாவட்டம் சங்க்ராயிலில், அமுல் நிறுவனத்தின் வங்காள பால் பண்ணை திட்டம் தொடங்கப்பட்டது. ரூ.700 கோடி மதிப்பிலான இந்த திட்டத்தில் உல கின் மிகப்பெரிய தயிர் உற்பத்தி ஆலை நிறுவப்பட உள்ளது. மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

இந்த தொழிற்சாலையில் தினமும் 30 லட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தி, 10 லட்சம் கிலோ தயிர் மற்றும் பிற பால் பொருட்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இந்தத் திட்டத்தால் சுமார் 1.25 லட்சம் பால் உற்பத்தியாளர்கள், குறிப்பாக 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் பயனடைவார்கள் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

அமித்ஷா பேசும்போது, "மேற்கு வங்கத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் சுதந்திரத்துக்குப் பிறகு இல்லாத ஒன்று. பா.ஜ.க. அரசு பொறுப்பேற்ற பிறகு. 'சோனார் பங்களா' (பொன்னான வங்காளம்) என்ற கனவை மீண்டும் நனவாக்கும் முயற்சி தொடங்கி உள்ளது" என்று கூறினார்.

## நாடாளுமன்றத்தில் ஆக்கப்பூர்வ விவாதம் நடைபெற வேண்டும்: பிரதமர் மோடி




புதுடெல்லி, ஜூலை 21

மழைக்கால கூட்டத்தொடர் தொடர்பாக நாடாளுமன்ற வளாகத்தில் பிரதமர் மோடி பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது;

"விண்வெளித் துறையில் இந்தியர்கள் சாதனைகள் புரிந்து வருகின்றனர். ராஜஸ்தானில் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அமைக்கப்பட்டுள்ளது. ஹைட்ரஜனில் இயங்கும் ரெயிலை அறிமுகப்படுத்தி உள்ளோம். இப்படிப்பட்ட சாதனைகளை சில நாடுகள் மட்டுமே செய்திருக்கின்றன. அதில் இந்தியாவும் ஒன்று. இந்த சாதனைகள், இந்தியா வளர்ச்சிப்பாதையில் செல்வதை காட்டுகின்றன.

உலகில் அதிவேகமாக வளரும் பொருளாதார நாடுகளில் இந்தியாவும் ஒன்று. மேற்காசிய போர் இந்திய வளர்ச்சியை தடுக்கவில்லை. மேற்காசிய போரால் ஏற்பட்ட சவால்களை இந்தியா வெற்றிகரமாக சமாளித்தது. சர்வதேச அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு அதிகரித்து வருகிறது. பல்வேறு பிரச்சினைகளை கடந்து இந்திய பொருளாதாரம் 7.5 சதவீத வளர்ச்சியை அடைந்துள்ளது.

நாடாளுமன்றத்தில் ஆக்கப்பூர்வ விவாதம் நடைபெற வேண்டும். நாடாளுமன்ற விவாதங்களுக்கு மதிப்பு அளித்து, அனைத்து கருத்துகளையும் மதிக்க வேண்டும். அனுபவம் வாய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், தங்களது அனுபவத்தின் மூலம் நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்க வேண்டும். வேகமான வளர்ச்சி மூலம் இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய வேண்டும்." இவ்வாறு அவர் பேசினார்.

## ஈரானுக்கு பயணம் செய்வதை தவிர்க்க இந்தியர்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தல்

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி மாதம் தாக்குதல் நடத்தியது. இதையடுத்து, ஈரான் அமெரிக்கா இடையேயான போர் தொடர்ந்து நீடித்து வருகிறது. ஹர்முஸ் ஜலசந்தியை மூடுவதாக அறிவித்ததுடன் அவ்வழியாக சென்ற சரக்கு கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது.

இதையடுத்து ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலை தொடர்ந்து வளைகுடா நாடுகளில் அமெரிக்க படைத்தளங்கள் உள்ள நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இதனால் ஈரான், அமெரிக்கா இடையே மீண்டும் மோதல் ஏற்பட்டுள்ளது. இன்று 9வது நாளாக மோதல் நீடித்து வரும் நிலையில் இந்த போரில் ஈரானில் 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அமெரிக்க வீரர்கள் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, ஈரானின் உள்கட்டமைப்புகள் மீது அமெரிக்கா தாக்குதலை தொடங்கியுள்ளது. இந்த மோதலால் மத்திய கிழக்கில் பதற்றம் அதிகரித்துள்ளது

இந்நிலையில், இந்தியர்கள் ஈரானுக்கு பயணம் செய்வதை தவிர்க்குமாறு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக ஈரானுக்கு செல்வதை தவிர்க்குமாறு மத்திய அரசு தெரிவித்துள்ளது. மேலும், ஈரானில் உள்ள இந்தியர்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறும் மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

# முதல்அமைச்சர் விஜயுடன் ஃபோர்டு நிறுவனத்தின் உயர்மட்டக் குழுவினர் சந்திப்பு




சென்னை, ஜூலை 21


தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

முதல்அமைச்சர்விஜய்யை இன்று (20.7.2026) தலைமைச் செயலகத்தில், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற கார் உற்பத்தி நிறுவனமான ஃபோர்டு நிறுவனத்தின் துணைத் தலைவர் மேத்யூ கோட்லெவ்ஸ்கி *(Thiru. Mathew Godleweski)* தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பின்போது, இந்நிறுவனம், தமிழ்நாட்டில் தனது உற்பத்தி திட்டத்தை மீண்டும் தொடங்குவது பற்றியும், தற்போது நிறுவியுள்ள உலகளாவிய திறன் மையங்கள் விரிவாக்கம் தொடர்பாகவும், இனிவரும் காலங்களில், உற்பத்தித் துறையில் மேற்கொள்ளப்படவுள்ள விரிவாக்க திட்டங்கள் குறித்தும் விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

ஃபோர்டு நிறுவனம், சென்னையில், ஒரு மிகப்பெரிய உலகளாவிய திறன் மையம் ஒன்றினை செயல்படுத்தி வருகிறது. 12,000 தொழில்நுட்ப வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், சமீபத்தில்தான், இந்நிறுவனம், கோயம்புத்தூரில் ஒரு உலகளாவிய திறன் மையம் நிறுவியுள்ளது. அது மட்டுமின்றி, தற்போது உள்ள மறைமலை நகர் உற்பத்திச் சாலையில், 3250 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், இன்ஜின்கள் உற்பத்தி தொடங்க உள்ளது.

## தாம்பரம் அடுத்த மணிமங்கலம் பாரதி நகரில் தேவி கருமாரியம்மன் கோயில் தீ மிதி திருவிழா: 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர் கலந்து சாமி தரிசனம் செய்தனர்.



தாம்பரம் அடுத்த மணிமங்கலம் ஊராட்சி பாரதி நகர் பகுதியில் அருள்மிகு ஸ்ரீ தேவி கருமாரியம்மன் கோயில் உள்ளது. இந்தக் கோயிலில் 30 ஆம் ஆண்டு கூழ் வார்த்தல் திருவிழாவும், 26ஆம் ஆண்டு தீமிதி திருவிழா நடைப்பெற்றது. தீமிதி திருவிழாவையொட்டி கிராம தேவதைகளான ஸ்ரீதாமரை கன்னியம்மன், மற்றும் கருமாரி அம்மனுக்கு அபிஷேகம் மற்றும் தீபாரதனை நடைபெற்றது. அதனை தொடர்ந்து இன்று காலை கூழ் வார்த்தல் நிகழ்ச்சியும் வெகு சிறப்பாக நடைப்பெற்றது. மா லை தீ மிதிக்கும் பக்தர்களுக்கு மாலை அணிவித்து விரத்துடன் தீமிதி திருவிழாவில் கலந்து கொணடனர். மாலை அணிந்து விரதம் இருந்த 300க்கும் மேற்பட்ட கையில் தீ சட்டி ஏந்தியும், அலகு குத்தியும், குழந்தைகளை சுமந்துகொண்டும் பக்தர்கள் தீமித்து தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர்.

தீ மிதி திருவிழாவை முன்னிட்டு மூலவர் ஸ்ரீதேவி கருமாரியம்மன் சந்தனகாப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். பின்னர் 10 ஆயிரம் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதையடுத்து இறுதியாக வாணவேடிக்கை நிகழ்ச்சி சிறப்பாக நடைப்பெற்றது. இதில் மணிமங்கலம் அதன் சுற்றுவட்டாரத்தை சேர்ந்த படப்பை, முடிச்சூர், பெருங்களத்தூர், வண்டலூர், மணிமங்கலம், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துக்கொண்டு ஸ்ரீதேவி கருமாரி அம்மனை தரிசனம் செய்து சென்றனர்.



திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.மோகனச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில், பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் 20262027 திட்டத்தின் கீழ் குழந்தை பாலியில் வன்கொடுமை மற்றும் குழந்தை திருமணம் நடைபெறாமல் முன்னேற்பாடுகளுடன் செயல்பட்ட 5 கிராமங்களைச் சேர்ந்த குழந்தைகள் பாதுகாப்பு குழுவினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.மோகனச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் பாராட்டி கேடயம், நற்சான்றிதழ் மற்றும் மரக்கன்றினை வழங்கினார்கள்.

## கொடுங்கையூரில் உயிருக்கு உலை வைக்கும் குப்பைமேடு வளாகத்தை மாற்றக்கோரி சிபிஐஎம் மாணவர் படை தலைமையில் பாடை கட்டி ஊர்வலம் எடுத்து வந்தனர்



சென்னை பகுதியில் செயல்பட்டு வரும் குப்பைமேடு வளாகத்தை உடனடியாக அகற்றக்கோரி சிபிஐஎம் மாணவர் படை தலைமையில் இளைஞரை ஒருவரை படுக்க வைத்து பாடை கட்டி ஒப்பாரி வைத்து நூதன முறையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் சிபிஐஎம் மாவட்ட செயலாளர் ராமகிருஷ்ணன் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் மகேந்திரன் முன்னாள் எம்எல்ஏ, லோகநாதன் பகுதி செயலாளர் ரவிக்குமார் உள்ளிட்டோர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து முன்னாள் எம்எல்ஏ மகேந்திரன் தெரிவித்ததாவது கொடுங்கையூர் குப்பைமேடு பல ஆண்டுகளாக வட சென்னையின் மிகப்பெரிய சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார பிரச்சனையாக இருந்து வருவதாகவும் இந்த குப்பை மேட்டில் நாள்தோறும் சென்னை மாநகரில் பல்வேறு பகுதிகளான ஆர்கே நகர் திருவொற்றியூர் பெரம்பூர் எம்கேபி நகர் உள்ளிட்ட பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கான குப்பைகளை கொண்டுவரப்படுவதுதான்அவற்றிலிருந்து வெளிப்படும் துர்நாற்றம் என்பது நச்சுப் புகையால் சுற்றுவட்டாரப்பர் மக்கள் கடுமையாக பாதிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

## பவானியில் தனியார் மருத்துவமனையில் பிறந்த பெண் குழந்தை மர்மமான முறையில் உயிரிழப்பு




சேலம் மாவட்டம் எடப்பாடி, காட்டுவளவு பகுதியைச் சேர்ந்தவர்கள் பிரியதர்ஷினி (26) ஈரோடு மாவட்டம் பவானியில் உள்ள தனியார் மருத்துவமனையில் பிரசவத்திற்காக சேர்ந்த நிலையில், கடந்த 18ஆம் தேதி பிரசவத்திற்காக சேர்ந்துளனர் தொடர்ந்து அன்று இரவே பெண் குழந்தை மர்மமான முறையில் உயிரிழந்துள்ளது, குழந்தையின்கழுத்து மற்றும் மூக்கில் காயம் இருந்துள்ளது, இது குறித்து மருத்துவமனையை நடத்தி வரும் மருத்துவர் அளித்த புகாரின் பேரில் பவானி போலீசார் குழந்தையை பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரிக்கு நேற்று அனுப்பி வைத்துள்ளனர், தொடர்ந்து இது குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தொடர்ந்து போலீசார் இச்சம்பம் குறித்து குழந்தையின் பாட்டி (அம்மாவின் அம்மா) விசாரணை வளையத்திற்குள் கொண்டு வந்துள்ளனர்.


# திருவொற்றியூரில் காங்கிரஸ் கட்சி சார்பாக முப்பெரும் விழா திருவொற்றியூர் தெற்கு பகுதி சார்பில் நடைபெற்றது



சென்னை திருவொற்றியூர் தியாகராயபுரத்தில் முப்பெரும் விழா நடைபெற்றது முன்னாள் முதல்வர் காமராஜரின் பிறந்தநாள் மற்றும் கக்கன் ஜியின் ஒளி மயமான இந்தியாவின் நம்பிக்கை ராகுல் காந்தி பிறந்த நாள் விழா மற்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில், "லஞ்சம் தவிர், நெஞ்சம் நிமிர்" என்ற தலைப்பில் மாநிலம் தழுவிய ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்பு கையெழுத்து இயக்கம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அரசு அலுவலகங்களில் நேர்மையான நிர்வாகத்தை வலியுறுத்தியும், லஞ்சத்தை ஒழிப்பதற்கான விழிப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தவும் இந்த இயக்கம் முன்னிட்டு மேலும் தமிழக காங்கிரஸ் மாநில தலைவர் மாணிக்கம் தாகூர்அறிவுறுத்தலின்படி திருவொற்றியூர் தெற்கு பகுதி காங்கிரஸ் கட்சி தலைவர் கே.ஆர் சிவகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வட சென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாதரம்மா கனி கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைத்து மாணவ மாணவிகளுக்கு நோட்டு புக்கு பேனா மற்றும் ஏழை எளியவர்களுக்கு வேட்டி சேலை மதிய உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட தலைவர் துரைராஜ், முன்னாள் மாநில இளைஞர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் நாகராஜ், மாவட்ட துணை தலைவர் ஜோதி பிரகாஷ், மாவட்ட நிர்வாகிகள்

ஜான்சன், மகேஸ்வர்மன், யுவராஜ், திருவொற்றியூர் கிழக்கு பகுதி தலைவர் கலையரசன், 12வது வட்டத் தலைவர் சிவ கிருஷ்ணன் 13 வது வட்டத்தலைவர் மாறன் காண்டீபன் பாலாஜி தமிழ்வாணன் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் பொண்ணு ரங்கம் விமல் தாஸ், உமாபதி, கலைமணி, தொண்டன் சுப்பிரமணியம், மூத்த காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள், மற்றும் பெரும் திரளாக காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# சுருளி அருவியில் நீர்வரத்து இல்லை: சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றம்



தேனி மாவட்டம் கம்பம் அருகே அமைந்துள்ள இயற்கை எழில் கொஞ்சும் சுருளி அருவியில் தற்போது நீர்வரத்து முற்றிலும் நின்றுபோயுள்ளது. இதனால், தினந்தோறும் குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் மிகுந்த ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர் .

அருவியில் தண்ணீர் இல்லாததால் குளிக்கவும், இயற்கையை ரசிக்கவும் முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, இந்த சுற்றுலாவை மட்டுமே நம்பி வாழும் சிறு வியாபாரிகளும் கடுமையான வருவாய் இழப்பைச் சந்தித்து வருகின்றனர் .

விரைவில் பருவமழை பெய்து, சுருளி அருவியில் மீண்டும் நீர்வரத்து அதிகரிக்க வேண்டும்; அதன் மூலம் சுற்றுலாப் பயணிகளின் மகிழ்ச்சியும், தங்களின் வாழ்வாதாரமும் திரும்ப வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது .

# தாம்பரம் மாநகராட்சியில் மக்கள் பிரச்சனையை சரி செய்ய முடியவில்லை: அமைச்சர் சரத்குமார் பேச்சு



தாம்பரம் மாநகராட்சியில் மக்கள் பிரச்சனையை சரி செய்ய முடியவில்லை: கவுன்சிலர்கள் அரசியல் அதிகமாக உள்ளது

வருகின்ற மாநகராட்சி தேர்தலில் நடக்கும் ஆட்சி மாற்றமே மக்கள் எழுச்சியின் சாட்சியாக இருக்க வேண்டும் என்று அமைச்சர் சரத்குமார் தெரிவித்துள்ளார்

பெருந்தலைவர் காமராஜரின் வம்சாவளியைச் சேர்ந்த டாக்டர் மஞ்சுப்பிரியா மாரிசாமி தலைமையில், 500க்கும் மேற்பட்டோர் தாம்பரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தனர்.

இதில் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் சரத்குமார்முன்னிலையில் புதிய உறுப்பினர்கள் கட்சியில் இணைந்தனர்.

பின்னர்நிகழ்ச்சி மேடையில் பேசிய அமைச்சர் சரத்குமார் தாம்பரம் மாநகராட்சியில் மக்கள் பிரச்சனையை சரி செய்ய முடியவில்லை கவுன்சிலர்கள் அரசியல் அதிகமாக உள்ளது. வரவிருக்கும் உள்ளாட்சித் ர்தேலில் தமிழக வெற்றிக் கழகம் வேட்பாளராக முதல் அமைச்சர் யாரை வேட்பாளராக அறிவிக்கிறாரோ அவர்களை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய தொண்டர்கள் முழுவீச்சில் பணியாற்ற வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

இந்த இணைவு விழாவில் கட்சியின் மாநில, மாவட்ட மற்றும் உள்ளூர் நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். 500க்கும் மேற்பட்டோர் ஒரே நேரத்தில் கட்சியில் இணைந்தது, தாம்பரம் பகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தின் அமைப்பு வலுப்பெற்று வருவதற்கான முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது.

# நள்ளிரவில் அம்மன் சிலை உடன் நிர்வாணமாக ஓடிச் சென்று குளத்தில் குதித்து தற்கொலை செய்து கொண்ட பெண் இன்ஜினியர்



ஆந்திர மாநிலம் விஜயநகரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் தேஜஸ்வினி, வயது 25. பெங்களூருவில் உள்ள சாப்ட் வேர் நிறுவனத்தில் என்ஜினீயராக பணியாற்றி வந்தார். கடுமையான பணிச்சுமையால் சுமார் 6 மாதங்களுக்கு முன்பு வேலையை அவர் ராஜினாமா செய்ததாக கூறப்படுகிறது. பின்னர் தாயாருடன் ஐதராபாத்தில் வாடகை வீட்டில் வசித்து வந்தார்.

சம்பவத்தன்று அதிகாலை 2.30 மணியளவில் அந்த பெண் என்ஜினீயர், தனது தாயாரை வீட்டில் வைத்து பூட்டி விட்டு வீட்டில் இருந்து வெளியேறினார். பின்னர் தனது உடைகளை திடீரென களைந்து விட்டு தெருக்களில் நிர்வாணமாக சுற்றித்திரிந்த தேஜஸ்வினி, கையில் புடவை ஒன்றையும் வைத்திருந்தார். தொடர்ந்து, அருகே உள்ள பீரம்மா கோவிலுக்குள் நிர்வாணமாக நுழைந்த அவர்,

அங்கிருந்த அம்மன் சிலையை எடுத்துக் கொண்டு, அருகே இருந்த கோவில் குளத்தில் குதித்து திடீரென தற்கொலை செய்து கொண்டார்.

இந்த காட்சிகள் அங்கிருந்த கண்காணிப்பு கேமராக்களில் பதிவாகியுள்ளன. மறுநாள் காலை, அறை கதவு பூட்டப்பட்டிருப்பதை கண்டு தேஜஸ்வினியின் தாய் அலறினார். அக்கம் பக்கத்தினர் உதவியுடன் அவர் வெளியே வந்தார். மகளை காணவில்லை என தேடியபோது, அவரது உடல் கோவில் குளத்தில் மிதப்பது தெரியவந்தது. இதுகுறித்து போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவலின்பேரில் சம்பவ இடத்துக்கு வந்த மீட்புப் படையினர், தேஜஸ்வினியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பினர்.

அதே சமயம், அவர் எடுத்துச் சென்ற அம்மன் சிலையை காணவில்லை. வழக்கின் முக்கிய ஆதாரமாக கருதப்படுவதால் குளத்தில் சிலையை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. தனது மகளுக்கு அடிக்கடி பயங்கர கனவுகள் வந்ததாகவும், சமீபகாலமாக அவர் மனநல சிகிச்சை பெற்று வந்ததாகவும் பெண் என்ஜினீயரின் தாயார் போலீசாரிடம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பழனி கோவில் நிலம் அபகரிக்கப்பட்டது எப்படி? வெளியானது பத்திரம்



பழனி, ஜூலை 21

பழனி அடிவாரம் பகுதியில் தண்டபாணி சுவாமி மடத்தின் அறக்கட்டளைக்கு சொந்தமான 1 ஏக்கர் 40 சென்ட் நிலம் உள்ளது. அதன் மதிப்பு ரூ.100 கோடி என்று கூறப்படுகிறது. பழனி முருகன் கோவில் நிர்வாகம், அந்த நிலத்தை நிர்வகித்து வருகிறது. மேலும் கடந்த ஆண்டு முருக பக்தர்களின் வாகன நிறுத்துமிடமாக மாற்றப்பட்டது. இந்தநிலையில் கடந்த 6ந்தேதி பழனி சார் பதிவாளர் அலுவலகத்தில், ரூ.2 கோடிக்கு கிரையமாக அந்த நிலம் பத்திரப்பதிவு செய்யப்பட்டது.

இதுகுறித்து அறிந்ததும் கோவில் நிர்வாகம் சார்பில் போலீசில் புகார் செய்யப்பட்டது. அதன்பேரில் பழனி சார்பதிவாளர் ஜஸ்டின்மணிகண்டன், விழுப்புரத்தை சேர்ந்த பள்ளி ஆசிரியர் முருகதாஸ், திருப்பூர்மாவட்டம் உடுமலையை அடுத்த பாப்பன் குளத்தை சேர்ந்த வெள்ளத்துரை, பழனி டி.கே.என்.புதூரை சேர்ந்த சேதுபதி ஆகிய 4 பேர் மீது முதற்கட்டமாக போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

தமிழகத்தையே அதிர்ச்சியடைய செய்யும் வகையில் நடந்த சம்பவத்தின் எதிரொலியாக சார்பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன், மாவட்ட பதிவாளர் சசிகலா ஆகியோர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டனர். இதற்கிடையே அந்த நிலத்தை தனியாருக்கு பத்திரப்பதிவு செய்தது செல்லாது என்று மதுரை ஐகோர்ட்டு கிளை உத்தரவிட்டது. அதோடு நில மோசடி வழக்கு சி.பி.சி.ஐ.டி. போலீசுக்கு மாற்றப்பட்டது.

அதன்படி. நில மோசடி தொடர்பாக திண்டுக்கல் சி.பி.சி.ஐ.டி. போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணையை தொடங்கியது. மேலும்சி.பி.சி.ஐ.டி. போலீஸ் சூப்பிரண்டு சஜிதா,துணைசூப்பிரண்டு அஜய் தங்கம் மற்றும் 5 மாவட்டங்களை சேர்ந்த சி.பி.சி.ஐ.டி. போலீசார் திண்டுக்கல்லில் கடந்த சிலநாட்களாகமுகாமிட்டு தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், பழனி கோவில் நிலம் அபகரிக்கப்பட்டது எப்படி? என்பது குறித்த தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ரூ.100 கோடி மதிப்பிலான நிலம் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தில் தண்டபாணி மடம் தனியார் அறக்கட்டளை என குறிப்பிடப்பட்டுள்ளது. தண்டபாணி மடத்திற்கு சொந்தமான நிலங்கள் மூலம் வருவாய் ஈட்டி தர்மகாரியங்கள் செய்வது வழக்கம் என பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. ரூ.100 கோடி மதிப்பிலான நிலம் மூலம் எதிர்பார்த்த வருவாய் கிடைக்காத காரணத்தினால் விற்பனை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரூ.100 கோடி நிலத்தை ரூ.2 கோடிக்கு கேட்டுள்ளதே அதிக விலை எனவும் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த மார்ச் 27ம் தேதி கையெழுத்தான விற்பனை பத்திரம் ஜூன் 6ம் தேதி பழனி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# காசிமேட்டில் அம்மோனியா கசிவு ஏற்பட்ட ஐஸ் பாக்டரில் மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் கோட்டாட்சியர் தாசில்தார் ஆய்வு



சென்னை ராயபுரம் காசிமேடு பகுதியில் இயங்கி வரும் ஜெயா வாணி ஐஸ் பாக்டரியல் நேற்று இரவு ஐஸ் பாக்டரில் பணி செய்யும் ஊழியர்கள் பக்கேட்டில் இருந்த அமோனியாவை கால்வாயில் தவறுதலாக ஊற்றி உள்ளனர் இதனால் காசிமேடு சுற்றுவட்டாரத்தில் அம்மோனியா வாயு பரவியது இதனால் மீன் மார்க்கெட் வரும் மீனவர்கள் தொண்டை எரிச்சல் கண் எரிச்சல் போன்ற வற்றால் பாதிக்கப்பட்டனர் உடனடியாக போலீசார் தொழிலாளர் நல ஆய்வாளர் ராயபுரத்தில் இருந்து தீயணைப்பு மற்றும் மீட்பு படையினர் விரைந்து வந்து தண்ணீர் அடித்து அமோனியாவை கட்டுக்குள் கொண்டு வந்தனர் இந்நிலையில் மீனவர்கள் பெரியபாளையத்தில் தனியாருக்கு சொந்தமான இறால் குடோனில் அமோனியா கசிவு ஏற்பட்டு 18 பேர் உயிரிழந்ததை தெரிவித்து அச்சமடைந்தனர் மேலும் இது தொடர்பாக மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் ஆய்வு மேற்கொள்ள கோரிக்கை விடுத்தனர் இதனைஅடுத்துஇன்று காலை கோட்டாட்சியர் செந்தில்நாதன் தாசில்தார் கவிதா மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் என போலீசார் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்டோர் ஜெய வாணி ஐஸ் பாக்டரில் உரிமையாளரிடம் மற்றும் ஐஸ் பாக்டரியை சுற்றி ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர் மேலும் எந்த அளவுக்கு அம்மோனியா வைத்துள்ளனர் என்று விசாரணை செய்து வருகின்றனர்.

# திருவொற்றியூர் வழக்கறிஞர் சங்கத்தின் முப்பெரும் விழாவில் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு வெற்றி கோப்பையை வழங்கிய சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன்.



திருவொற்றியூர் வழக்கறிஞர் சங்கம் முப்பெரும் விழா திருவொற்றியூரில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு வழக்கறிஞர் சங்க தலைவர் எம். அருள்மொழி தலைமை வகித்தார். செயலாளர்யு.எஸ்.குறளரசன் முன்னிலை வைத்தார். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் கலந்து கொண்டார். அப்போது நீதிபதி சுவாமிநாதன் பேசியது, நீதிமன்றங்களில் தேங்கும் அதிக வழக்குகளை விரைவில் தீர்ப்பதற்காக நீதிபதிகள் இரவு வரை பணியாற்றியினாலும் அதற்கு ஏற்றார் போல வழக்கறிஞர்களும் பணி செய்ய வேண்டிய நிலை உள்ளது. அவர்களுக்கும் மாலை நேரத்தில் அடுத்த நாள் வழக்குகள் குறித்து விவாத குறிப்புகளை தயார் செய்ய வேண்டும். குடும்பத்தின் நலனிலும் அக்கறை செலுத்த வேண்டும். எனவே இரு தரப்பு வழக்கறிஞர்களின் ஒப்புதலோடு மட்டுமே கூடுதல் நேரங்கள் நீதிபதிகள் பணியாற்ற வேண்டும். பல்வேறு விமர்சனத்திற்கு உரிய தீர்ப்புகளை நான் வழங்கி இருந்தாலும் எவ்வித சலனமும் இன்றி சற்று மாறுபட்ட கோணத்தில் நீதிபதியாக தொடர்ந்து பணியாற்றி வருகிறேன். சிக்கலான வழக்குகளில் சிறந்த தீர்ப்பை அளிக்க வேண்டும் எனில் நீதிபதிகளுக்கு உதவிடும் வகையில் வழக்கறிஞர்கள் நன்கு கற்றறிந்து குறிப்புகளை தந்து உதவ வேண்டும். ஒரு தீர்ப்பை அளிக்க பல்வேறு கோணங்களில் நீதிபதிகள் சிந்திக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. எனவே நீதிபதிகளுக்கு உதவிடும் நோக்கத்தில் வழக்கறிஞர்கள் பல்வேறு நீதிமன்றங்களின் கடந்த கால தீர்ப்புகளை மேற்கோள் காட்டும் வகையில் எப்போதும் தயாராக இருக்க வேண்டும். சமூகத்தில் மற்றவர்களை காட்டிலும் வழக்கறிஞர்களுக்கு சமூக அக்கறை கண்டிப்பாக இருக்க வேண்டும். அண்மையில் பெரியபாளையம் அருகே அம்மோனியா வாயு கசிவு சம்பவத்தால் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க இந்த வழக்கறிஞர் சங்கங்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் வெளிமாநிலங்களைசேர்ந்த ஏழை எளிய குடும்பங்களை சார்ந்த பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயமான நிவாரணத்தை பெற்றுத்தர முடியும்.

மேலும் வழக்கறிஞர்கள் தங்களது வாழ்க்கையை மிகவும் தூய்மையாகவும், எளிமையாகவும் அமைத்துக் கொள்ள வேண்டும். புகை பிடித்தல், மது பழக்கம், சூதாட்டம் உள்ளிட்டவைகளில் நாட்டம் இருக்கக் கூடாது. இதனால் வழக்கறிஞர்களும் அவரது குடும்பத்தினரும் நலமான வாழ்வை தொடர முடியும் அதற்கு இளம் வழக்கறிஞர்கள் உறுதி ஏற்க வேண்டும். அதற்கு மூத்த வழக்கறிஞர்கள் வழி காட்ட வேண்டும் என்றார் நீதிபதி சுவாமிநாதன். பின்னர் பெரியபாளையத்தில் அண்மையில் நடைபெற்ற அமோனியா வாயு கசிவு சம்பவம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட நீதிபதி ஜூலியட் புஷ்பாவிடம் மனு ஒன்றை நீதிபதி சுவாமிநாதன் வழங்கினார்.

நிகழ்ச்சியில் திருவள்ளூர் மாவட்ட நீதிபதி ஜே.ஜூலியட் புஷ்பா, தலைமை நீதித்துறை நடுவர் கே. நம்பிராஜன், திருவொற்றியூர் நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.பிரபா தாமஸ், கே கார்த்திக், ஆர். ரேவந்த், தாம்பரம் சார்பு நீதிமன்ற நீதிபதி ஆர்.வேல்ராஜ், திருவொற்றியூர் எம்எல்ஏ என். செந்தில்குமார், சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் சங்கத் தலைவர் ஆர். சி.பால் கனகராஜ், சங்க நிர்வாகிகள் எஸ் பால யோகேஸ்வரன், வெற்றிவேல் பாண்டியன், சண்முகப்பிரியா, கே நவீன் குமார், கே.ஷோபனா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் நடைபெறுவது சட்டத்தின் ஆட்சியா, சாத்தானின் ஆட்சியா? மு.க. ஸ்டாலின்



சென்னை, ஜூலை 21

திமுக தலைவர் மு.க. ஸ்டாலின்தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:

ஜனநாயக பண்புகள் அறவே இன்றி செயல்படும் த.வெ.க. ஆட்சியில், விளாத்திக்குளம் எம்.எல்.ஏ. மார்க்கண்டேயன் கைது செய்யப்பட்டிருப்பதற்கு கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆட்சியில் நடைபெறும் தவறுகளையும் அவலங்களையும் சுட்டிக்காட்டும் தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், இணைய ஆதரவாளர்கள் என அனைவரையும் தொடர்ந்து வேட்டையாடி வருகிறது *Take Diversion Model* த.வெ.க. அரசு. "அவதூறு வழக்குகளில் கூட எதற்கு தொடர்பில்லாத குற்றப்பிரிவுகளைச் சேர்க்கிறீர்கள்?" என நீதிமன்றத்திடம் சமீபத்தில் தானே குட்டு வாங்கினீர்கள்?

கைது செய்யப்பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர் தனது வழக்கறிஞர் மற்றும் ஆதரவாளர்களைச் சந்திக்கக் கூட மறுக்கப்பட்டுள்ளார். அவருக்கான மருந்துகளை வழங்கச் சென்றவர்களும் தடுக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவரின் அடிப்படை சட்ட உரிமைகளும் மனித உரிமைகளும்கூட மறுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் நடைபெறுவது சட்டத்தின் ஆட்சியா, சாத்தானின் ஆட்சியா? மைதானத்தில் மாத்திரை அரைத்த அமைச்சர் மீதும், சொந்தக் கட்சி பெண் உறுப்பினரின் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்குமே நடவடிக்கை எடுக்க வக்கற்ற த.வெ.க. அரசு அரசியல் விமர்சனங்களுக்கு மட்டும் அலறித் துடித்துக் கைது செய்வது ஏன்? ஆட்சியாளர்களின் சட்டத்துக்குப் புறம்பான உத்தரவுகளை எல்லாம் நிறைவேற்றி அவர்களின் மனதைக் குளிர்விப்பது காவல்துறையினரின் பணி அல்ல! சட்டப்படியும் மனசாட்சிப்படியும் செயல்படுங்கள். இல்லாவிட்டால், பின்விளைவுகள் ஏற்படும்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## மின் கணக்கீட்டில் உள்ள குளறுபடிகளை போக்க வேண்டும்: டிடிவி தினகரன்



சென்னை, ஜூலை 21 அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது; “திமுக ஆட்சிப்பொறுப்பேற்ற நாள் முதலே, தமிழகத்தில் அன்றாடம் அரங்கேறும் அறிவிக்கப்படாத மின்வெட்டால் பொதுமக்கள் தொடங்கி, விவசாயிகள், வணிகர்கள், சிறு,குறு நடுத்தர தொழில் முனைவோர்கள் என அனைத்து தரப்பினரும் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகி வரும் நிலையில், தற்போது மின் கட்டணமும் இருமடங்காக அதிகரித்திருப்பதாக மின் நுகர்வோர்கள் மத்தியில் புகார் எழுந்துள்ளது.

ஒவ்வொரு மாதமும் 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்படும் என தேர்தலுக்கு முன்பாக வாக்குறுதியளித்த திமுக, ஆட்சிக்கு வந்த பின்பு இரு மாதத்திற்கு 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் என அறிவித்து மக்களைஏமாற்றிய கையோடு, இலவசமாக வழங்கப்படும் மின்சாரத்துக்கான தொகையையும் மக்களிடமே மறைமுகமாக மின் கட்டணத்தின் மூலம் வசூல் செய்ய முற்படுவது கடும் கண்டனத்திற்குரியது.

ஏற்கனவே, அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வால், தமிழக மக்கள் பொருளாதார ரீதியில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ஆண்டுதோறும் உயர்த்தப்படும் மின்கட்டணம் நடப்பாண்டில் உயர்த்தப்படாது என பத்திரிகையாளர்கள் முன்னிலையில் பொய் வாக்குறுதி அளித்துவிட்டு, பொதுமக்களின் கண்களில் மண்ணைதூவி மறைமுகமாக மின்கட்டணத்தை உயர்த்தும் நடவடிக்கையில் மின்வாரியம் இறங்கியிருக்கிறதோ? என்ற சந்தேகம் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

மின் கணக்கீட்டு முறையில் குறைபாடுகள் ஏற்பட்டிருப்பதால் தவறான மதிப்பீட்டில் அதிகப்படியான கட்டணங்கள் விதிக்கப்பட்டிருப்பதாக மின்வாரிய தலைமைப் பொறியாளர்களே ஒப்புக் கொண்டிருக்கும் நிலையில், மின்நுகர்வோர்களிடம் இருந்து இதுவரை அதிகமாக பெறப்பட்ட மின்கட்டணங்களை திருப்பியளிப்பதோடு, தமிழகம் முழுவதும் குளறுபடிகள் குறித்த முறையான விசாரணை மேற்கொண்டு, அவை சரிசெய்யப்படும் வரை மின்கட்டணம் வசூலிக்கப்படமாட்டாது என மின்வாரியம் அறிவிக்க வேண்டும்.

பொதுமக்களுக்கு தடையற்ற மின்சாரம் வழங்க வேண்டிய பொறுப்பு மிக்க பதவியில் இருக்கும் மின்சாரத்துறை அமைச்சர், தன் துறையில் நடைபெறும் சாதனத் திருட்டுகளையும், நிர்வாகக் குளறுபடிகளையும் களைய உருப்படியான சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், காலை மாலை என இருவேளைகளிலும் தன் குறைகளை மறைப்பதற்காகவும், பிரச்சனைகளை மடைமாற்றுவதற்காகவும், எதிர்க்கட்சித் தலைவர்களைஎப்படி இழிவாக விமர்சிக்கலாம் என்பதிலேயே முழு கவனத்தை செலுத்தி வருவதே மின்சாரத்துறையில் நடைபெற்றிருக்கும் இத்தகைய குளறுபடிகளுக்கு முக்கிய காரணமாக அமைந்திருக்கிறது.

எனவே, மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் மின்சாரத்துறை மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமே தவிர, குழப்பமான, குளறுபடிகள் நிறைந்த கணக்கீடுகளின்மூலம் மக்களை சுரண்டும் அமைப்பாக செயல்படக்கூடாது என்பதை இனியாவது உணர்ந்து, தடையற்ற மின்சாரத்தை எந்தவித குளறுபடிகளுமின்றி விநியோகம் செய்திட வேண்டும் என மின்வாரியத்தையும், தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன்.”

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## அந்தியூர் அருகே 3 இளைஞர்கள் கைது, 30 மாத்திரைகள் பறிமுதல்

ஈரோடு, ஜூலை 21 ஈரோடு மாவட்டம் அந்தியூர்அருகே போதை மாத்திரை விற்பனை செய்த 3 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஈரோடு மாவட்டம் அந்தியூர் போலிசாருக்கு சுற்றுவட்டாரப் பகுதிகளில் போதைப்பொருள் விற்பனை செய்வதாக தகவல் கிடைத்தது. இதையடுத்து போலீசார் குந்துபாயூர், தவிட்டுப்பாளையம், மற்றும் புதுப்பாளையம் போன்ற இடங்களில் நேற்று அதிரடியாக சோதனை மேற்கொண்டனர்.

அப்போதுகுந்துபாயூரை சேர்ந்த ஜாபர் அலி (வயது 21), தவிட்டுப்பாளையம் வேங்கையன் வீதி விக்னேஷ்(வயது 26), மற்றும் புதுப்பாளையம் வ.உ.சி. நகர் ஞானராஜ் (வயது31), ஆகியோர் வீட்டில் சோதனையிட்டபோது,போதை மாத்திரை விற்பனைக்கு வைத்திருந்தது தெரியவந்தது.

எனவே மூவரையும் போலீசார் கைது செய்தனர். மேலும் அவர்களிடமிருந்து 30 போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டன. இது குறித்து போலீசார் அவர்களிடம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கல் குவாரி பள்ளத்தில் விழுந்த 2 இளைஞர்கள் உயிரிழப்பு



கன்னியாகுமரி, ஜூலை 21 கன்னியாகுமரி அருகே கல் குவாரி பள்ளத்தில் விழுந்த 2 இளைஞர்கள் உயிரிழந்தனர்.

கன்னியாகுமரி, மாவட்டம் விருசுடி பகுதியில் நாகராஜ், டிராவிட் ஆகியோர் அதிவேகமாக பைக்கில் சென்றனர்.

அப்போது பைக் திடீரென்று கட்டுப்பாட்டை இழந்து பழுதடைந்த கல் குவாரி பள்ளத்தில் விழுந்தது. இதில் கல் குவாரியில் இருந்த தண்ணீரில் மூழ்கி அந்த 2 இளைஞர்களும் உயிரிழந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தஅஞ்சுகிராமம்போலீசார், உயிரிழந்தவர்களின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த துயரசம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

## சி.வி.சண்முகத்தின் ஆதரவாளர்கள் 500க்கும் மேற்பட்டோர் அதிமுகவில் இருந்து விலகல்



சென்னை, ஜூலை 21 தமிழக சட்டமன்ற தேர்தல் தோல்வியால் சி.வி. சண்முகம், எஸ்.பி. வேலுமணி தலைமையில் சில எம்.எல்.ஏ.க்கள் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக போர்க்கொடி தூக்கினர். இதனால் அ.தி.மு.க. 2ஆக உடைந்து மீண்டும் ஒன்றிணைந்தது. இருப்பினும் சி.வி.சண்முகம் மட்டும்தனி அணியாக செயல்பட்டு வருகிறார்.

இதற்கிடையே சி.வி.சண்முகத்திற்கு பதில் விழுப்புரம் மாவட்ட அ.தி.மு.க. செயலாளராக பசுபதியை நியமித்து எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டார்.

இதனால் விழுப்புரம் மாவட்டத்தில் சி.வி.சண்முகம் தலைமையில் ஒரு அணியும், மாவட்ட செயலாளர் பசுபதி தலைமையில் ஒரு அணியும் செயல்பட்டு வருகிறது. மேலும் இருதரப்பினர் இடையே அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டு வருகிறது. கடந்த சில தினங்களுக்கு முன்பு நாட்டார்மங்கலத்தில் மாவட்ட செயலாளர் பசுபதி தலைமையில் நடந்த அ.தி.மு.க. கூட்டத்தில் சி.வி.சண்முகம் தரப்பினருக்கும், பசுபதி தரப்பினருக்கும்இடையே மோதல் ஏற்பட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், சி.வி. சண்முகத்தின் ஆதரவாளர்கள் 11 பேரை பதவியில் இருந்து நீக்கி எடப்பாடி பழனிசாமிஉத்தரவிட்டுள்ளார்.அதன்படிவிழுப்புரம் மாவட்ட அ.தி.மு.க. இணைச்செயலாளர் ஆனந்த், மாவட்ட பொருளாளர் வெங்கடேசன், மாவட்டஇளைஞர்இளம்பெண்கள் பாசறை செயலாளர் ஜெயப்பிரகாஷ், அண்ணா தொழிற்சங்க செயலாளர்பாஸ்கரன்உள்ளிட்ட 11 பேர்கட்சி பதவியில் இருந்து நீக்கப்பட்டனர். அடுத்தடுத்து அ.தி.மு.க.வில் இருந்து முக்கிய நிர்வாகிகள் நீக்கப்பட்டு வருவது அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், விழுப்புரத்தில் சி.வி.சண்முகம் ஆதரவாளர்கள் 500க்கும் மேற்பட்டோர் அதிமுகவில் இருந்து விலக முடிவு செய்துள்ளனர். அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை சந்தித்து விலகல் கடிதம் அளிக்க சென்னைக்கு புறப்பட்டுள்ளனர். மாவட்ட, ஒன்றிய, நகர, கிளை நிர்வாகிகள் அதிமுகவில் இருந்து விலக முடிவெடுத்து பேருந்துகள் மற்றும் கார்களில் சென்னைக்கு புறப்பட்டுள்ளனர்.

சிவி சண்முகத்தின் ஆதரவாளர்கள் 300 பேர் தங்களது அடிப்படை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ய அதிமுக தலைமை அலுவலகத்திற்கு வர உள்ளதாக தகவல் வெளியான நிலையில், தற்போது பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. வழக்கமாக உதவி ஆய்வாளர் தலைமையில் 10 காவலர்கள் பணியில் இருக்கும் நிலையில், தற்போது 3 உதவி ஆய்வாளர்கள் தலைமையில் 30 பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

விழுப்புரம் மாவட்ட அதிமுக நிர்வாகிகள் கூண்டோடு விலக முடிவெடுத்துள்ளதால், அக்கட்சி அங்கு வலுவிழக்கும்சூழல்ஏற்பட்டுள்ளது.

## தூத்துக்குடியில் பொருட்காட்சியில் தகராறு: தவெகவினர் 10 பேர் மீது வழக்கு



தூத்துக்குடி, ஜூலை 21 தூத்துக்குடி பனிமய மாதா ஆலய திருவிழா வருகிற 26ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி 10நாட்கள்நடைபெறஉள்ளது. இதனை முன்னிட்டு ஆலயம் அருகே உள்ள மைதானத்தில் பொருட்காட்சிக்கான பணிகள் நடந்து வருகின்றன.

இந்த நிலையில், சம்பவத்தன்று இரவு பொருட்காட்சி அமைக்கும் பணிகள் நடந்து கொண்டு இருந்தன. அப்போது, அங்கு வந்த த.வெ.க.வை சேர்ந்த திவாகர் உள்ளிட்ட 10 பேர் தகராறு செய்ததாக கூறப்படுகிறது. தொடர்ந்து அங்கு இருந்த நாற்காலி, டியூப் லைட் உள்ளிட்ட பொருட்களை அடித்து நொறுக்கி சேதப்படுத்தினார்களாம். இதில் அவர்களுக்கு இடையே தகராறு ஏற்பட்டு உள்ளது. இது குறித்து தகவல் அறிந்த தென்பாகம் போலீஸ் இன்ஸ்பெக்டர் வேல்ராஜ் மற்றும் போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைநடத்தினர். தொடர்ந்து பொருட்காட்சி ஏற்பாட்டாளர் டென்சிங் கொடுத்த புகாரின் பேரில் த.வெ.க.வை சேர்ந்த திவாகர் உள்பட 10 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் தூத்துக்குடியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## 100 சேவல்கள் பலியிட்டு அன்னதானம்... ஆண்கள் மட்டும் பங்கேற்ற ஆடி படையல் திருவிழா



மதுரை, ஜூலை 21 மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி அருகே உள்ள மங்களாம்பட்டியில் மழை வேண்டி ஆண்கள் மட்டுமே படையல் வைத்து வழிபடும் வினோத திருவிழா ஆண்டுதோறும் ஆடி மாதம் நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்தாண்டு ஆடி படையல் திருவிழா நேற்று நடைபெற்றது.

இதையொட்டி கிராமத்தினர் பலரும் தங்களது வேண்டுதலை நிறைவேற்றும் விதமாக மதுரைவீரன் சுவாமிக்கு சேவல்களை பலியிட்டு வழிபாடு நடத்தினர். அதன்படி 100க்கும் மேற்பட்டசேவல்கள்பலியிடப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. இதில் திரளான பெண்களும், ஆண்களும் கலந்து கொண்டு வழிபட்டனர்.

தொடர்ந்து பலியிடப்பட்ட 100க்கும் மேற்பட்ட சேவல்கள் பெரிய பெரிய பாத்திரங்களில் சமைக்கப்பட்டன. சேவல் கறியுடன், மொச்சைப்பயறு கலந்து உணவு சமைக்கப்பட்டது. இந்த உணவுகளை ஆண்கள் மட்டுமே சமைத்தனர். இதை தொடர்ந்து அப்பகுதியில் வாழை இலை போட்டு பக்தர்களுக்கு சுடச்சுட உணவு பரிமாறப்பட்டு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த அன்னதானத்தில் ஆண்கள் மட்டுமே கலந்து கொண்டு சாப்பிட்டனர்.

பெண்கள் கோவிலில் சாமி தரிசனம் செய்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டு சென்றனர். பெண்களுக்கு அன்னதானம் சாப்பிட அனுமதி இல்லை என பொதுமக்கள் தெரிவித்தனர். இவ்வாறு வழிபடுவதால் மழை பெய்து விவசாயம் செழிக்கும் என்பது இப்பகுதி மக்களின் நம்பிக்கையாகும். இதற்கிடையே நேற்று விழா நடக்கும்போது திடீரென அப்பகுதியில் சாரல் மழை பெய்ததால் பக்தர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## விநாயகர் சதுர்த்தியையொட்டி வேலூரில் சிலைகள் தயாரிக்கும் பணி தீவிரம்



வேலூர், ஜூலை 21 வேலூரில் சிறிய விநாயகர் சிலைகள் தயாரிக்கும்பணிகள்மும்முரமாக நடந்து வருகிறது.

விநாயகர் சதுர்த்தி விழா நாடு முழுவதும் வருகிற செப்டம்பர் மாதம் 14ந்தேதி கொண்டாடப்படுகிறது. இதையொட்டி வேலூர் மாவட்டத்தில் 500க்கும் மேற்பட்ட இடங்களில் விநாயகர் சிலைகள் வைத்து பொதுமக்கள் வழிபடுவார்கள். 1 அடி சிலை முதல் 10 அடிக்கும் மேலான பிரம்மாண்ட சிலைகள் ஆங்காங்கே வைக்கப்பட்டிருக்கும்.

அன்றைய தினம் சிறப்பு பூஜைகள் செய்து வழிபடுவார்கள். கோவில்களிலும் சிறப்பு பூஜைகள் நடக்கும். பின்னர் ஆங்காங்கே வைக்கப்பட்ட 2 நாட்கள் கழித்து சிலைகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு நீர்நிலைகளில் கரைப்பார்கள்.

பக்தர்கள் பலர் தங்கள் வீடுகளிலும் விநாயகர் சதுர்த்தி விழாவை உற்சாகமாக கொண்டாடுவார்கள்.

அப்போது களிமண்ணால் தயாரிக்கப்பட்ட சிறிய அளவிலான விநாயகர்சிலைகளைவீட்டில் வைத்து அருகம்புல் சாத்தி, கொழுக்கட்டை படைத்து வழிபடுவார்கள். இதையொட்டி வேலூரில் சிறிய சிலைகள் தயாரிக்கும் பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது.

இதுகுறித்து விநாயகர் சிலை தயாரிக்கும் தொழிலாளர்கள் கூறுகையில், விநாயகர் சதுர்த்தியையொட்டி கைகளால் சிலைகள் தயாரிக்கும் பணியை மேற்கொண்டு வருகிறோம். ஆண்டுதோறும் எங்களுக்கு மண் தட்டுப் பாடு ஏற்படும். ஏரியில் களிமண் எடுக்க உரிய காலத்துக்குள் விரைந்து அனுமதி அளிக்கப்பட வேண்டும். கைகளால் தயாரிக்கும் சிலைகளை பொதுமக்களும் பலர் ஆர்வமுடன் வாங்கி செல்வார்கள். தற்போது வெயில் தாக்கம் உள்ளதால் தற்போதே நாங்கள் சிலை தயாரிப்பு பணியை தொடங்கி விட்டோம். சிலை அளவுக்கு ஏற்ப ரூ.200 முதல் ரூ.2,000 வரை விற்பனை செய்கிறோம், என்றனர்.

## தேர்வு தோல்வியை தட்டிக் கேட்ட தாயை அடித்துக் கொன்ற மகன் கைது

சென்னை, ஜூலை 21 சென்னை பெருங்குடியில் தேர்வு தோல்வியை தட்டிக் கேட்ட தாயை அடித்துக் கொன்ற பிளஸ் 2 மாணவனை போலீசார் கைது செய்தனர்.

சென்னை பெருங்குடி பகுதியைச் சேர்ந்த பிளஸ் 2 மாணவர் ஒருவர் சமீபத்தில் வெளியான பொதுத் தேர்வில் தோல்வி அடைந்துள்ளார். இதனால் அதிர்ச்சியடைந்த அவரது தாய், மகனைத் தொடர்ந்து கண்டித்து வந்தார். தேர்வு எழுதாமல் சரியாகப் படிக்காதது குறித்தும், எதிர்காலம் குறித்தும் தாய் தட்டிக் கேட்டார். இதனால் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்த நிலையில், நேற்று நள்ளிரவு நேரத்தில் தந்தை வீட்டில் இல்லாத சமயம் பார்த்து, தூங்கிக் கொண்டிருந்த தாயின் மீது மகன் திடீரென தாக்குதல் நடத்தினார். ஆத்திரத்தில் தாயின் கழுத்தை நெரித்ததோடு மட்டுமன்றி, கத்தியால் குத்தியும், வீட்டிலிருந்த கல்லால் தலையில் அடித்தும் கொடூரமாகக் கொலை செய்துள்ளார்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார், தாயின் உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும், தாயைக் கொலை செய்த மகனைக் கைது செய்து விசாரணை நடத்தினர்.

முதற்கட்ட விசாரணையில், கொலை செய்த இளைஞர் கடந்த சில மாதங்களாக மனநலப் பாதிப்பிற்குஉள்ளாகி, அதற்கான சிகிச்சையில் இருந்து வந்தது தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து போலீசார் தொடர்ந்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதி மக்களிடையேபெரும்சோகத்தை ஏற்படுத்தியது.

## அடுத்த இன்னிங்ஸை ஆரம்பிக்கலாமா: உதயநிதி ஸ்டாலின்

சென்னை, ஜூலை 21 திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதன்மைப் பிரிவுகளில் ஒன்றான தி.மு.க. இளைஞர் அணி இன்று தனது 47வது ஆண்டில் வெற்றிகரமாக அடியெடுத்து வைக்கிறது. இதையொட்டி, தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான உதயநிதி ஸ்டாலின்தனது எக்ஸ்தளப் பக்கத்தில் கூறி இருப்பதாவது:

கழகம் நெருக்கடியில் இருந்த நேரத்தில், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலானமிசாBatchஐகொண்டு தொடங்கப்பட்ட நம் திமுக இளைஞரணி இன்றைக்கு 47ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. கொள்கைப் பணிமக்கள் பணிகளைக் களத்திற்கும் காலத்திற்கும் ஏற்றார் போல் முன்னெடுக்கக் காத்திருக்கும் கழக இளைஞர் அணியின் அடுத்த



இன்னிங்ஸை ஆரம்பிக்கலாமா..! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## தேயிலை விற்பனையில் புதிய சாதனை... தென் மாநில ஏலத்தில் ரூ. 53 கோடி வருவாய்!

குன்னூர் ஜூலை 21 தென் மாநில அளவில் நடைபெற்ற, 29வது வார தேயிலை ஏலத்தில், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு வர்த்தகம் வளர்ச்சி கண்டு உள்ளது.

குன்னூர், டீசர்வ், கோவை, கொச்சி என நான்கு தேயிலை ஏல மையங்களில் வாரந்தோறும் இரு நாட்கள் ஏலம் நடக்கிறது.

தென் மாநில அளவில் நடந்த 29வது ஏலத்தில், 47.02 லட்சம் கிலோ தேயிலை வரத்து இருந்த நிலையில், 41.69 லட்சம் கிலோ விற்று, ரூ.52.96 கோடி வருவாய் கிடைத்தது. கடந்தாண்டு, இதே காலக்கட்டத்தில் 43.65 லட்சம் கிலோவந்ததில், 32.95 லட்சம் கிலோ விற்பனையாகி, ரூ.36.31 கோடி மொத்த வருவாய் கிடைத்தது. இதை ஒப்பிடுகையில், நடப்பாண்டு ரூ.16.65 கோடி வருவாய் உயர்ந்துள்ளது.

குன்னூர் ஏல மையத்தில் விற்பனையும், சராசரி விலையும் அதிகரித்து அபார வளர்ச்சிக்கு காரணமாக அமைந்தது. கொச்சி மற்றும் கோவை மையங்களும் விற்பனையளவில் வளர்ச்சி எட்டின. 'டீசர்வ்' மையம் மட்டும் விற்பனை வருவாயில் கடந்த ஆண்டை விட சற்று சரிவை சந்தித்தது.

தின கனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

21.07.2026

# உடன்குடி கருப்பட்டி வியாபாரிகள் 5 பேருக்கு ரூ.38 கோடி அபராதம்

குலசேகரன்பட்டினம், ஜூலை 21

'கற்பகத்தரு' என்று அழைக்கப்படும் பனையில் இருந்து கிடைக்கப்பெறும் பதநீரை காய்ச்சி கருப்பட்டி தயாரிக்கின்றனர். பனை மரங்கள் நிறைந்த தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி பகுதியில் தயாரிக்கப்படும் கருப்பட்டிக்கு புவிசார் குறியீடு கிடைக்கப் பெற்றுள்ளது. இதனால் உடன்குடி பகுதியில் பலரும் பனைத்தொழிலில் ஆர்வமுடன் ஈடுபட்டு கருப்பட்டி தயாரித்து விற்கின்றனர்.

பனை தொழிலாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில், பதநீரில் இருந்து தயாரிக்கப்படும் கருப்பட்டி, கற்கண்டுக்கு மத்திய அரசு ஜி.எஸ்.டி. விலக்கு அளித்துள்ளது. எனினும் அவற்றை கடைகள், சூப்பர் மார்க்கெட்டுகளில் விற்பனை செய்யும்போது 5 சதவீத ஜி.எஸ்.டி. விதிக்கப்படுகிறது.

ஆனால் பதநீரில் 75 சதவீதத்துக்கும் அதிகமாக சீனி கலந்து கருப்பட்டி, கற்கண்டு போன்றவை தயாரித்தால், அவற்றுக்கு 18 சதவீத வரி விதிக்கப்படுகிறது. பனை பொருட்களை சில்லறையில் விற்பனை செய்தால் வரி விலக்கு அளிக்கப்படுகிறது. இந்த நிலையில் தமிழகத்திலேயே உடன்குடி பகுதியில்தான் சீனி மூட்டைகளை வியாபாரிகள் அதிகளவில் கொள்முதல் செய்ததாக நெல்லை ஜி.எஸ்.டி. அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதுதொடர்பாக ஜி.எஸ்.டி. அதிகாரிகள் உடன்குடி பகுதியில் ஆய்வு செய்தனர்.

இதில், உடன்குடி பகுதியில் கடந்த சில வாரங்களில் ரூ.5 கோடிக்கு சீனி மூட்டைகளை வியாபாரிகள் கொள்முதல் செய்ததும், பதநீரில் சீனி கலந்து கருப்பட்டி தயாரித்து, அதனை அசல் கருப்பட்டி என்று கூறி ரூ.6 கோடி வரை விற்று மோசடியில் ஈடுபட்டதும் தெரியவந்தது.

மேலும் சீனி கலந்து தயாரித்த கருப்பட்டிகளை அசல் கருப் பட்டி என்று கூறி கடைகளில் விற்றதால் 5 சதவீத ஜி.எஸ்.டி. மட்டுமே விதிக்கப்பட்டது. ஆனால் அவர்கள், பதநீரில் 60 முதல் 70 சதவீதம் வரையிலும் சீனி கலந்து கருப்பட்டி தயாரித்து விற்றுள்ளனர். இதன் மூலம் சீனி கலந்து தயாரிக்கப்பட்ட கருப்பட்டிக்கு 18 சதவீத ஜி.எஸ்.டி. விதிக்கப்படாமல், 5 சதவீத வரி மட்டுமே விதிக்கப்பட்டு உள்ளது.

இவ்வாறு கடந்த 6 ஆண்டுகளில் கருப்பட்டி வியாபாரிகள் சிலர் பல்வேறு முறைகேடுகள் செய்தது கண்டறியப்பட்டன. இதுதொடர்பாக உடன்குடி பகுதியைச் சேர்ந்த 5 கருப்பட்டி வியாபாரிகளுக்கு மொத்தம் ரூ.38 கோடி அபராதம் விதிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# முதல்அமைச்சர் விஜய்க்கு மிரட்டல் விடுக்கும் வகையில் பேசிய திமுக எம்.எல்.ஏ. கைது



கோவில்பட்டி, ஜூலை 21

கோவில்பட்டியில் தி.மு.க. பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் இரவு கிருஷ்ணன்கோவில் திடலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கருணாநிதி எம்.எல். ஏ. தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர்கள் பீக்கிலிப்பட்டி முருகேசன், ராதாகிருஷ்ணன், ஜெயக்கண்ணன், சுப்பிரமணியன், கருப்பசாமி, சின்னப்பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் விளாத்திகுளம் எம்.எல்.ஏ. மார்க்கண்டேயன் பேசும்போது, “மானங்கெட்ட தமிழ்நாட்டின் முதல்அமைச்சர் உன்னை (விஜய்) சட்டமன்றத்துக்குள் வைத்து பார்த்துக் கொள்கிறோம். எங்களை என்ன கோமாளி என்றா நினைத்துக் கொண்டிருக்கிறாய்... சட்டமன்றத்தை பூட்டுவோம் என நீ கூறுகிறாய்... சட்டமன்றத்தை பூட்டினால் உன் எலும்புகள் இருக்காது; எலும்பை உடைத்துதான் அனுப்பி விடுவோம் என்று முதல்அமைச்சர் விஜய்யை ஒருமையில் பேசினார். முதல்அமைச்சர் விஜய் குறித்து சர்ச்சைக்குரிய வகையிலும், சட்டமன்றத்திற்கு வாருங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று மிரட்டும் தொனியிலும் விளாத்திகுளம் எம்.எல்.ஏ மார்க்ண்டேயன் பேசிய வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது. திமுக எம்.எல்.ஏ.வின் பேச்சுக்கு கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் (21.07.2026)

**மேஷம்:** தொழில் மற்றும் அலுவலகத்தில் நேர்மறையான மாற்றங்கள் உண்டாகும். நிலுவையில் இருந்த வேலைகள் சிறப்பாக முடிவடையும். குடும்பத்தினருடன் மகிழ்ச்சியான நேரத்தை செலவிடுவீர்கள்.

**ரிஷபம்:** பொருளாதார நிலை உயரும். நிதி வரவு திருப்திகரமாக இருக்கும். புதிய தொழில் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும். ஆரோக்கியத்தில் சிறு கவனம் தேவை.

**மிதுனம்:** திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி நடக்கும். பணியிடத்தில் மேல் அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். தேவையில்லாத தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்துவது நல்லது.

**கடகம்:** உறவினர்கள் மூலம் நல்ல செய்தி வந்து சேரும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். உணர்ச்சிவசப்பட்டு முடிவுகளை எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது.

**சிம்மம்:** வேலையில் புது உத்வேகம் கிடைக்கும். உங்கள் திறமைக்கு ஏற்ற அங்கீகாரம் தேடிவரும். குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும்.

**கன்னி:** வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும். நண்பர்களின் ஆதரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும். பேச்சுவார்த்தைகளில் நிதானத்தைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** தொழில் ரீதியாக புதிய வாய்ப்புகள் கதவைத் தட்டும். பொருளாதார ரீதியாக முன்னேற்றமான நாள். பயணங்கள் மூலம் நன்மை உண்டாகும்.

**விருச்சிகம்:** திடீர் பணவரவுக்கும் வாய்ப்புகள் உண்டு. உத்தியோகத்தில் இருந்து வந்த தடைகள் விலகும். தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**தனுசு:** தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி காணப்படும். மன அழுத்தம் குறைந்து அமைதி உண்டாகும். தம்பதியிடையே அன்பு அதிகரிக்கும்.

**மகரம்:** வேலைச்சுமை சற்று அதிகமாக இருந்தாலும் அதற்கேற்ற பலன் கிடைக்கும். நிதானமாகச் செயல்படுவது நல்லது. ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் தேவை.

**கும்பம்:** காலை 7:54 மணி வரை சந்திராஷ்டமம் இருப்பதால், புதிய முயற்சிகளையோ அல்லது பெரிய முதலீடுகளையோ தவிர்ப்பது நல்லது. அதன் பின் நிலைமை சாதகமாக மாறும்.

**மீனம்:** இன்று காலை 7:54 மணிக்கு மேல் சந்திராஷ்டமம் தொடங்குவதால், வீண் வாக்குவாதங்களைத் தவிர்த்து அமைதி காப்பது நல்லது. முக்கிய முடிவுகளை எடுப்பதைத் தள்ளிப் போடவும்.

# திருத்தணி முருகன் கோவிலில் ஆடி கிருத்திகை விழா: திருவள்ளூர் மாவட்டத்துக்கு ஆக. 6ந்தேதி உள்ளூர் விடுமுறை



திருவள்ளூர், ஜூலை 21

திருவள்ளூர்மாவட்ட கலெக்டர்கவிதா விடுத்துள்ள செய்திக்குறிப்பில்கூறியிருப்பதாவது:

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியில் முருகப்பெருமானின் ஐந்தாம் படை வீடான முருகன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் அடுத்த மாதம் 6ந் தேதி (வியாழக்கிழமை) அன்று ஒரு நாள் நடைபெற இருக்கும் ஆடி கிருத்திகை திருவிழாவை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்படுகிறது. இந்த உள்ளூர் விடுமுறை நாள் செலவாணி முறிச்சட்டம் 1881ன் கீழ் வராது என்பதால் இந்த மாவட்டத்தில் உள்ள கருவூலங்களும், சார் நிலை கருவூலங்களும், அரசு பாதுகாப்பான அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு குறிப்பிட்ட பணியாளர்களோடு அடுத்த மாதம் 6ந்தேதியன்று செயல்பட வேண்டும். இந்த விடுமுறை நாளை ஈடு செய்யும் பொருட்டு அடுத்த மாதம் 8ந்தேதி சனிக்கிழமை அன்று பணிநாளாக அறிவிக்கப்படுகிறது. எனவே இந்த உள்ளூர் விடுமுறையானது திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் பொருந்தும் என மாவட்ட நிர்வாகத்தால் தெரிவித்து கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சேலம்: பெண் வியாபாரியிடம் தாலிச்சங்கிலி பறிப்பு

சேலம், ஜூலை 21

சேலம் அருகே கருப்பூர் திடீர் பட்டினத்தை சேர்ந்தவர் ராஜேந்திரன். இவரது மனைவி சாரதா (வயது 51). இவர், அங்குள்ள ஒரு முருகன் கோவில் அருகே காய்கறி கடை வைத்துள்ளார். நேற்று காலை அவர் கடையை திறந்து வழக்கம்போல் வியாபாரம் செய்து கொண்டிருந்தார். அப்போது அங்கு மோட்டார் சைக்கிளில் ஹெல்மெட் அணிந்து வந்த வாலிபர். வண்டியை நிறுத்திவிட்டு கடைக்குள் சென்றார். இதையடுத்து அந்த வாலிபர், சில காய்கறிகளை வாங்கிக்கொண்டு தேங்காய் கேட்டுள்ளார். இதையடுத்து சாரதா 2 தேங்காய்களை எடுத்து கொடுத்தபோது, அவர் கழுத்தில் அணிந் திருந்த 22 கிராம் எடை கொண்ட தாலிச்சங்கிலியை அந்த வாலிபர் பறித்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பி சென்றார். இது குறித்த புகாரின்பேரில் கருப்பூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். மேலும், அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்து சாரதாவிடம் நகையை பறித்து சென்ற மர்ம ஆசாமியை வலை வீசி தேடி வருகிறார்கள்.

# நாமக்கல்லில் மேல்நிலை குடிநீர் தொட்டி விழுந்து 2 பேர் பலி



நாமக்கல், ஜூலை 21

நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் அருகே சரக்கு வாகனம் மேல்நிலை குடிநீர் தொட்டியின்தூணில் மோதியதில், தொட்டி வாகனத்தின் மீது சரிந்து விழுந்து டிரைவர் மற்றும் தொழிலாளி உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருச்செங்கோடு தாலுகா வையப்பமலையில் இருந்து முட்டைகள் ஏற்றிக் கொண்டு கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரை நோக்கி நேற்று மாலை சரக்கு வாகனம் ஒன்று புறப்பட்டது. அந்த வாகனத்தை திருச்செங்கோடு பகுதியைச் சேர்ந்த சுபாஷ் (23) ஓட்டிச் சென்றார். அவருடன் மல்லசமுத்திரத்தைச் சேர்ந்த சரக்கு ஏற்றி இறக்கும் தொழிலாளி குமார் (29) பயணம் செய்தார்.

மல்லசமுத்திரம் அருகே மேட்டுப்பாளையம் சத்யாநகர் பேருந்து நிறுத்தம் அருகே சென்றபோது, டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த சரக்கு வாகனம் தாறுமாறாக ஓடி சாலையோரத்தில் இருந்த மேல்நிலை குடிநீர் தொட்டியின் தூண்களில் பலத்த வேகத்தில் மோதியது.

இதன் தாக்கத்தில் குடிநீர் தொட்டியின் தூண்கள் முறிந்து, 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை தொட்டி முழுவதுமாக சரக்கு வாகனத்தின் மீது சரிந்து விழுந்தது. இந்த விபத்தில் டிரைவர் சுபாஷ் மற்றும் தொழிலாளி குமார் ஆகியோர் வாகனத்துக்குள் சிக்கி உடல்நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த போலீசார் மற்றும் மீட்புப் பணியினர், ராட்சத குடிநீர் தொட்டி வாகனத்தின் மீது விழுந்திருந்ததால் உடல்களை மீட்பதில் சிரமம் ஏற்பட்டது. பின்னர் பொக்லைன் எந்திரம் வரவழைக்கப்பட்டு குடிநீர் தொட்டி இடித்து அகற்றப்பட்டதையடுத்து இருவரின் உடல்களும் மீட்கப்பட்டு பிரேதப் பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்த விபத்து தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# உலகக்கோப்பை கால்பந்து இறுதிப்போட்டி: மெரினா கடற்கரையில் கண்டுகளித்த ரசிகர்கள்



23வதுபிபாஉலகக்கோப்பைகால்பந்துதொடரின் இறுதிப்போட்டியில் அர்ஜென்டினா ஸ்பெயின் மோதின. இப்போட்டியில் அர்ஜென்டினாவை 10 என்றகோல்கணக்கில்வீழ்த்திஉலகக்கோப்பையை ஸ்பெயின் வென்றது. இப்போட்டியில் கூடுதலாக வழங்கப்பட்ட நேரத்தில் 106வது நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் பெரன் டொரஸ் கோல் அடித்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார்.

இந்நிலையில், உலகக்கோப்பை கால்பந்து இறுதிப்போட்டி மெரினா கடற்கரையில் ஒளிபரப்பப்பட்டது. சென்னை மாநகராட்சி சார்பில் மெரினா கடற்கரையில் பிரமாண்ட திரை அமைக்கப்பட்டு அதில் உலகக்கோப்பை கால்பந்து இறுதிப்போட்டி ஒளிபரப்பப்பட்டது. இதை ஏராளமான ரசிகர்கள் கண்டு களித்தனர். அதேவேளை, நெட்ஓர்க் பிரச்சினை காரணமாக போட்டி ஒளிபரப்பில் அவ்வப்போது இடையூறு ஏற்பட்டதால் ரசிகர்கள் சற்று ஏமாற்றம் அடைந்தனர்.

## ஸ்பெயின் அணிக்கு உலகக்கோப்பையை வழங்கிய அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்

இப்போட்டியில் கூடுதலாக வழங்கப்பட்ட நேரத்தில் 106வது நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் பெரன் டொரஸ் கோல் அடித்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார்.

இந்நிலையில், உலகக்கோப்பை கால்பந்து இறுதிப்போட்டியை அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் நேரில் கண்டு களித்தார். இறுதிப்போட்டியில் வெற்றிபெற்ற ஸ்பெயின் அணிக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் உலகக்கோப்பையை வழங்கினார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப்பும், பிபா தலைவர் கியானி இன்பான்டினோவும் சேர்ந்து பிபா உலகக்கோப்பையை ஸ்பெயின் அணியிடம் வழங்கினர்.

# உலகக்கோப்பையை வென்ற ஸ்பெயினுக்கு கிடைக்கும் பரிசுத்தொகை எவ்வளவு தெரியுமா?



23வது பிபா உலகக்கோப்பை கால்பந்து தொடரின் இறுதிப்போட்டியில் அர்ஜென்டினா ஸ்பெயின் மோதின. இப்போட்டியில் அர்ஜென்டினாவை 10 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி உலகக்கோப்பையை ஸ்பெயின் வென்றது.

இப்போட்டியில்கூடுதலாகவழங்கப்பட்ட நேரத்தில் 106வது நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் பெரன் டொரஸ் கோல் அடித்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார்.

இந்நிலையில், உலகக்கோப்பையை வென்ற ஸ்பெயின் அணிக்கு 50 மில்லியன் அமெரிக்க டாலர்கள் பரிசுத்தொகை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி ஸ்பெயின் அணிக்கு இந்திய மதிப்பில் 4,814 கோடி ரூபாய் பரிசுத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 2வது இடம் பிடித்த அர்ஜென்டினா அணிக்கு ( 33 மில்லியன் டாலர்கள்) இந்திய மதிப்பில் 3,177 கோடி ரூபாய் பரிசுத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

# "ரூ.100 கோடி கொடுத்தாலும் மீண்டும் சோசியல் மீடியாவுக்கு வரமாட்டேன்" ஐஸ்வர்யா லட்சுமி



மலையாள திரையுலகின் முன்னணி நடிகைகளில் ஒருவரான ஐஸ்வர்யா லட்சுமி, தமிழிலும் தனக்கென தனி ரசிகர்பட்டாளத்தை உருவாக்கியுள்ளார். தனுஷுடன் நடித்த ஜகமே தந்திரம், விஷ்ணு விஷாலின் கட்டா குஸ்தி, மணிரத்னம் இயக்கிய பொன்னியின் செல்வன் ஆகிய படங்கள்மூலம்தமிழ்ரசிகர்களிடையேநல்லவரவேற்பைப பெற்றார். தற்போது கட்டா குஸ்தி 2 திரைப்படமும் திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடி வருகிறது.

இந்த நிலையில், கடந்த ஆண்டு இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட அனைத்து சமூக வலைதளங்களிலிருந்தும் விலகிய ஐஸ்வர்யா லட்சுமி, அந்த முடிவு தனக்கு மிகுந்த மன அமைதியை அளித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பேசிய அவர், "என்னுடைய புகைப்படங்களை மார்பிங் செய்து, ஆபாசமான மற்றும் தரக்குறைவான கருத்துகளை பதிவிட்டது என்னை மிகவும் மனவேதனைக்குள்ளாக்கியது. ஒரு கட்டத்தில் இந்த உலகமே எனக்கு எதிராக இருப்பது போலவும், அனைவரும் என்னை வெறுப்பது போலவும் உணர்ந்தேன்" என்றார்.

மேலும், தனது முடிவில் எந்த மாற்றமும் இருக்காது என தெரிவித்த அவர், "யாராவது எனக்கு 100 கோடி ரூபாய் கொடுத்தாலும், சமூக வலைதளங்களின் பக்கம் நான் திரும்ப மாட்டேன். இப்போது ஆன்லைனில் பழகுவதை விட மக்களை நேரில் சந்தித்து பேசுவதையே அதிகம் விரும்புகிறேன்" என்று கூறியுள்ளார்.

# 4வது தேசிய விருது வென்ற மம்முட்டியை வாழ்த்திய மோகன்லால்






நடிகர் மம்முட்டிக்கு தேசிய விருது அறிவிக்கப்பட்டதற்கு மோகன்லால் வாழ்த்துகள் கூறியுள்ளார்..

2024 ஆம் ஆண்டுக்கான தேசிய விருதுகள் அறிவிப்பில், ‘பிரம்மயுகம்’ படத்திற்குஇரண்டு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. சிறந்த நடிகராக மம்முட்டி ,சிறந்த ஒளிப்பதிவாளராக ஷெஹ்னாத் ஜலால் ஆகியோர் பிரம்மயுகம் படத்திற்காக தேசிய விருதை பெறுகின்றனர். மம்முட்டி சிறந்த நடிப்புக்காகப் பெறும் 4 வது தேசிய விருது இது.

இந்த நிலையில், நடிகர் மோகன்லால் பதிவொன்றை வெளியிட்டுள்ளார். அதில், “அன்பிற்கினிய இச்சாக்காவுக்கு ‘பிரம்மயுகம்’ திரைப்படத்திற்காக சிறந்தநடிகருக்கானதேசியவிருதுகிடைத்திருப்பதற்குஎனதுமனமார்ந்தவாழ்த்துகள். இதுநம்அனைவருக்கும் மிகுந்த பெருமையான தருணம். அவரது திறமைக்கு உரிய அங்கீகாரமாக இந்த விருது அமைந்துள்ளது. மேலும், வைக்கம் விஜயலட்சுமிக்கும் எனது வாழ்த்துகள். இது அவரது அசாதாரணமான திறமைக்குக் கிடைத்த அழகிய அங்கீகாரமாகும். இந்த உயரிய கௌரவத்தை அவர் பெற்றிருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. சிறந்த ஒளிப்பதிவாளராக ஷெஹ்னாத் ஜலால் தேசிய விருது பெற்றிருப்பதும், பெமினிச்சி பாத்திமா சிறந்த மலையாளத் திரைப்படமாகத் தேர்வாகியிருப்பதும் மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இயக்குநர் பாசில் முகம்மது மற்றும் படக்குழுவினர் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

மேலும், கார்த்திக் ஆர்யன், யாமி கவுதம், தனுஷ் மற்றும் 72வது தேசிய திரைப்பட விருதுகளில் கவுரவிக்கப்பட்ட அனைத்து கலைஞர்கள், திரைப்பட இயக்குநர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகள். இந்தியத் திரைப்பட உலகின் செழுமை, பன்முகத்தன்மை மற்றும் சிறப்பை இவ்வாறான உயரிய மேடையில் கொண்டாடப்படுவது எப்போதும் மகிழ்ச்சியளிக்கிறது. விருது பெற்ற அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை மனமார்ந்த வாழ்த்துகள். உங்கள் கலைப் பயணத்தில் மேலும் பல உயரங்களை எட்ட என் இதயப்பூர்வமான நல்வாழ்த்துகள்” என தெரிவித்துள்ளார்.

4 தேசிய விருதுகளை பெற்ற ஒரே மலையாள நடிகர் மம்முட்டிதான். 1989ல் ஒரு வடக்கன் வீரகதை மற்றும் மதிலுகளில் நடித்ததற்காக அவருக்கு முதல் தேசிய விருது கிடைத்தது. அதனைத்தொடர்ந்து, 1994ல் விதேயன் மற்றும் பொந்தன் மட ஆகிய படங்களில் நடித்ததற்காக தனது இரண்டாவது தேசிய விருதை வென்றார். அவரது மூன்றாவது தேசிய விருது 2000ல் டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர், இந்திய சட்ட நிபுணர், பொருளாதாரநிபுணர்மற்றும்சமூகசீர்திருத்தவாதியின்வாழ்க்கைவரலாற்றுத்திரைப்படத்திற்காககிடைத்தது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.